

4-11-2016 ரூ.12
இந்தியாவின் நம்பர் 1 தமிழ் வார இதழ்
குங்குமம்
3 புதிய பகுதிகள்
உயிரமுது
நட்புமொழி
தமிழ்நாட்டு நீதிமான்கள்
சூர்யா
இப்போது இன்டர்நேஷனல் போலீஸ்!
S
Exclusive



# மூவி அனலைஸிங் சர்வீஸ்!

இது சினிமா லாஜிக் மேஜிக்



நிச்சயமாக இது தமிழ் சினிமாவுக்கு புது விஷயம். தமிழில் டப் செய்யப்பட்ட ஹாலிவுட் படங்கள் வந்த பிறகு ரசிகர்கள் லாஜிக்கான திரைக்கதைகளை எதிர்பார்க்க ஆரம்பித்துவிட்டனர். இதனால் நம்மூர் இயக்குநர்களின் பொறுப்பு அதிகமாகிவிட்டது. 'தனி ஒருவன்' படத்தின் மெகா வெற்றிக்கு அதன் லாஜிக் நுட்பமான திரைக்கதையும் ஒரு காரணம். இப்படி திரைக்கதைக்கு லாஜிக் விஷயங்களை செய்து கொடுப்பதற்கென்றே ஒரு நிறுவனம் கோலிவுட்டுக்கும் வந்துவிட்டது. 'சாஃப்ட்வேர் பிசினஸை மேம்படுத்துவது எப்படி'

என்று ஆலோசனை வழங்கி வந்த 'ஃபிசிக்ஸ்' வெங்கடேஷ் நாராயணன், இப்போது மூவி அனலிஸ்ட்டாக களம் இறங்கி மீண்டும் மோகன்ராஜாவின் சிவகார்த்திகேயன் ப்ராஜெக்ட், சுசீந்திரனின் 'திருட்டுப்பயலே 2' படங்களில் பரபரக்கிறார்.

"ஒரு படத்தின் இயக்குநர், தயாரிப்பாளருக்கு அடுத்து எங்களிடம் தான் படத்தின் முழுக்கதையையும் சொல்கிறார். அந்தக் கதைக்கு வலு சேர்க்கும் விதமாக எங்கள் பணி அமையும். உதாரணமாக நான் பணியாற்றிய 'தனி ஒருவன்' படத்தில் போலீஸ் டிரெயினிங் போன்ற விஷயங்களில் உண்மைத் தன்மை இருக்க வேண்டும் என்பதற்காக எங்களது அனலிஸ்ட் டீம் பல உயர் போலீஸ் அதிகாரிகளிடம் பேசி, நேரில் சென்று ஆய்வு செய்து தகவல்களைத் திரட்டிக் கொடுத்தது. எங்களது உழைப்பிற்குக் கிடைத்த வெற்றியால் மீண்டும் மோகன்ராஜா சார் படம் கிடைத்திருக்கிறது" என ஆரம்பிக்கிறார் வெங்கடேஷ் நாராயணன்.

"நான் மெக்கானிக்கல் எஞ்சினியரிங் முடிச்சுட்டு அமெரிக்காவில் எம்.பி.ஏ. பண்ணினேன். இதற்கு இடையே ரயில்வே தேர்வில் பாஸ் செய்து அதிகாரியாக வேலை பார்த்திருக்கேன். அந்த டைம்லதான் பிசினஸ் கன்சல்டிங்ல ஆர்வம் வந்துச்சு. வேலையை



விட்டுட்டு கன்சல்டிங் நிறுவனத்தைத் தொடங்கினேன். ஒரு புராடக்டோ, சர்வீஸோ டிசைன் பண்ணும்போது எந்த மாதிரி விஷயங்களை கவனத்தில் எடுத்துக்கணும்னு ஆலோசனை சொல்வோம். கனடாவில் 'இன்டர்நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் பிசினஸ் அனலைஸிங்'னு ஒரு அமைப்பு இருக்கு. அந்த அமைப்போட இந்தியப் பிரதிநிதியா எங்களோட ஃபிசிக்ஸ் பிசினஸ் கன்சல்டன்சி இருக்கு. புதிதாகத் தொழில் தொடங்க நினைக்கிறவர்களுக்கு பிசினஸ்

ப்ளான் தேவைப்படும். அந்த வேலையை செய்து கொடுக்கிறோம்.

இந்திய சினிமாவில் பிசினஸ் அனலிஸ்ட்கள் இல்லை. அதனால போட்டியே இல்லாத இந்தத் துறையில் காலடி எடுத்து வைக்க விரும்பினேன். 2013ல இயக்குநர் மோகன்ராஜா சாரை பார்த்தேன். சின்னச் சின்ன விஷயங்களாக கலந்து பேசி முடிவெடுத்த பிறகே, அவர் முழு ஸ்கிரிப்ட்டையும் ரெடி பண்ணினார். மாசத்துல நாலைந்து நாட்களாவது அவரை சந்திப்போம். ஒவ்வொரு முறையும் குறைந்தது 5 மணி நேரம் பேசி, விஷயங்களைக் குறித்துக்கொள்ளுவோம்.

'தனி ஒருவன்' படத்தின் கதையைக் கேட்டதும், 1990லிருந்து 2012 வரை நடந்த சர்வதேசக் குற்றங்கள் என்னென்ன என்று லைப்ரரி, ஆன்லைன், நம்பகமான சோர்ஸ் என பல தளங்களிலும் ஆராய்ந்தோம். அதை 22 வகையான க்ரைம்களாக பிரிச்சோம். அதுல எதையெல்லாம் ஸ்கிரிப்ட் ஆக்க முடியுமோ அதையெல்லாம் தேர்ந்தெடுத்து இயக்குநரிடம் சொன்னோம். அதாவது ஒரு லாரிலோடு நிறைய நாங்க தகவல்கள் கொடுத்தால், அதில் இருந்து இயக்குநர் தனக்குத் தேவையானதை எடுத்துக்கொள்வார். 'தனி ஒருவன்' ஸ்கிரிப்ட்டில் போலீஸ் டிரெயினிங் காட்சிகள் இருந்ததால், நேஷனல் போலீஸ் அகாடமிக்கு சென்றும் தகவல்கள் திரட்டினோம்.

இப்ப ஜனங்களோட ரசனை ரொம்பவே மாறிடுச்சு. பத்து வருஷத்துக்கு முன்னாடி படத்துல எதைச் சொன்னாலும் கண்ணை மூடிக்கிட்டு நம்பிடுவாங்க. ஆனா, இப்போ எல்லாருக்குமே உலக நடப்புகள் தெரியறதால, படத்துல பார்க்கும்போது அதில் அறிவுபூர்வமான தகவல்கள், உண்மைத்தன்மை இருக்கணும்னு எதிர்பார்க்குறாங்க. அமெரிக்காவில் காலையில நடக்கற ஒரு விஷயத்தை அடுத்த நொடியில் இங்கிருக்கிற மக்கள் வாட்ஸ்அப்ல பார்க்கறாங்க. தகவல்கள் நிரம்பி வழியுற இந்த யுகத்துல, தவறான தகவல்கள் கேள்விக்கும் கேலிக்கும் ஆளாக்கப்படும்.

> பத்து வருஷத்துக்கு முன்னாடி படத்துல எதைச் சொன்னாலும் கண்ணை மூடிக்கிட்டு நம்பிடுவாங்க. ஆனா, இப்போ அதில் உண்மைத்தன்மை இருக்கணும்னு எதிர்பார்க்குறாங்க!

கற்பனைக் கதைக



**மோகன்ராஜாவுடன் வெங்கடேஷ்** நாராயணன்

ளைத் தவிர்த்து யதார்த்த கதைகளுக்கு எங்களால் நூறு சதவிகித லாஜிக் விஷயங்களைக் கொடுக்க முடியும். 200 விதமான டெக்னிக்குகளைப் பயன்படுத்தி, நலிவடைந்த எந்தத் துறையாக இருந்தாலும் எங்களால் மேம்படுத்த முடியும். எங்களின் இந்த ஃபார்முலாவைத்தான் மூவி அனலைஸிங் சர்வீஸிலும் பயன்படுத்துறோம். 'தனி ஒருவன்' படத்தின் தயாரிப்பாளர் கல்பாத்தி அகோரம் சாருக்கு எங்களது வொர்க் தெரியும் என்பதால், அடுத்து அவர் தயாரிக்கும் 'திருட்டுப் பயலே 2'க்கான வொர்க் எங்களுக்குக் கிடைச்சிருக்கு. மோகன்ராஜா சார் சிவகார்த்திகேயன், நயன்தாராவை வைத்து இயக்கும் படத்திற்கான எங்களது முழு வேலையும் முடிந்துவிட்டது. இந்தப் படம் 'தனி ஒருவனை' விட பல மடங்கு விறுவிறுப்பாக இருக்கும்.

ஸ்கிரிப்ட்டுக்காக பல ஆராய்ச்சிகளைப் பண்ணின மூவி அனலைஸ்ட் கதைக்கும், அதைப் பண்ணாத படத்துக்கும் இடையே ஏகப்பட்ட வித்தியாசங்களைப் பார்க்க முடியும். ஒரு திரைப்படத்தை முதல் பாதி, ரெண்டாவது பாதினு நாங்க பார்க்கறதில்ல. ஐந்து ஐந்து நிமிஷ காட்சிகளா பிரிச்சுப் பார்க்கறோம். ஒரு படத்தின் மொத்த படப்பிடிப்பும் முடிந்து போஸ்ட் ப்ரொடக்ஷன் நடப்பது போல, ஸ்கிரிப்ட்டுக்காக ப்ரீ புரொடக்ஷன் வொர்க் செய்தால், படம் எல்லோருக்கும் நிச்சயம் பிடிக்கும். வீடு கட்டுறதுக்கு முன்னாடி புளூ பிரின்ட்டில் அந்த வீட்டின் மொத்த அம்சங்களையும் நாம் பார்க்க முடியும். அப்படி ஒரு புளூபிரின்ட் முறையை ஸ்கிரிப்ட் சைடில் நாங்களும் ரெடி செய்து விடுகிறோம். முழுக்க முழுக்க காதல் கதை, காமெடி கதைகளுக்கு மூவி அனலைஸிங் சர்வீஸ் தேவைப்படாது. இப்ப இந்தத் துறையில் நாங்க மட்டுமே இருக்கோம். இன்னும் நிறைய பேர் வந்தால்தான் இந்தத் துறை வளரும். அப்படி மாறினால், உலகத் தரம் வாய்ந்த படங்களைத் தமிழில் நிச்சயமாக நீங்கள் பார்க்க முடியும்!”

**- மை.பாரதிராஜா**

படம்: **ஆர்.கோபால்**